## மாகம்புற துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனி - 2019

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

மாகம்புற துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 33 ஆம் பந்தியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தாயரிக்கும் போது நிலையான வைப்பின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 40,752,458 வட்டி வருமானம் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது நிதிச் செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். இது 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சரியாக உள்ளடக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

#### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிநிலைமைக் கூற்றில் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்படுகின்ற இழிவுப் பெறுமதி ரூபா 619,031 ஆக இருந்த நிலையான சொத்துக்கள், ரூபா 12,430,943 தொகையான இருப்புக்கள் மற்றும் கையிலுள்ள காசு ரூபா 173,727 என்பன பௌதீக ரீதியில் காணப்படவில்லை. ரூபா 13,223,704 தொகையான இந்த நட்டத்திற்காக ஏற்பாடுகளும் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படாதிருந்தமையினால் வருடாந்த அல்லது ஒட்டுமொத்த நட்டங்கள் அந்த அளவினால் அதிகரிக்க வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற சொத்துக்கள் பௌதீக ரீதியில் | நிறுவனத்திற்கு சொந்தமாக பௌதீகரீதியில் இந்த இருப்புக்கள் தற்போது காணப்படவில்லை. எதிர்காலத்தில் இந்த இருப்புக்களுக்காக இழப்பீட்டு ஒதுக்கமொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கம்பனி தொடர்பாக அறவிட வேண்டிய சகல பணத்தையும் அறவிடுவதற்காக முகாமைத்துவத்தால் நடவடிக்கை | முகாமைத்துவத்தால் சொத்துக்களை பாதுகாப்பதற்காக பொருத்தமான படிமுறைகள் எடுக்க வேண்டியிருந்ததுடன், சொத்துக்களின் இழப்பீடு தொடர்பாக பொறுப்புக்களுக்கும் கடப்பாடு உடையதாக இருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காணப்படாமைக்கான காரணம் மற்றும் அதற்குப் பொறுப்புவாய்ந்த நபர்களை தீர்மானிப்பதற்கு பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் சொத்துக்களின் பாதுகாப்பிற்காக முகாமைத்துவத்தால் போதியளவான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | எடுக்கப்பட்டுள்ளது. சில்லறைக் காசு மீதி பௌதீக ரீதியில் காணப்படவில்லை. | |

## 1.5.3 நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கம்பனியின் திரண்ட நட்டம் ரூபா 2,999,501,623 ஆக இருந்ததுடன், அத்திகதியில் கம்பனியின் தேறிய சொத்துக்கள் ரூபா 2,924,501,625 மறைப் பெறுமதியைக் காட்டியது. கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளும் 2017 நவம்பர் 13 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டிருந்ததுடன், 2018 பெப்ரவரி 15 ஆம் திகதி கம்பனியை கலைப்பதற்காக பணிப்பாளர் சபையினால் தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும், 2021 மார்ச் 15 ஆம் திகதி வரையும் கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | மாகம்புற துறைமுக முகாமைத்துவ தனியார் கம்பனி அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டமையினால் அதனை கலைப்பதற்காகவும் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்தது என கம்பனியால் தீர்மானிக்கப்பட்டிருந்து. அதனால் அதற்காக தேவையான அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை பத்திரம் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளின் பிரதிகள் அமைச்சின் செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவை அங்கீகாரம் பெற்றப்பட்டதன் பின்னர் தேவையான ஏனைய நடவடிக்கைள் விரைவாக மேற்கொள்ளப்படும். | கம்பனியை கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமை யினால் அதனை விரைவாக அமுல்படுத்துவதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் விரைவாக செயற்பட வேண்டும். |

## 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| ஹட்டன் நெஷனல் வங்கி கடன் மீதி | 4,190,556,780 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. | வங்கியுடன் கலந்துரையாடி பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| அரசாங்கத்திடம் இருந்து கிடைக்க வேண்டிய மீதி | 17,782,563 | | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| கப்பல் எண்ணெய் பாதுகாப்பிற்காக கிடைக்க வேண்டிய மீதி | 28,040,453 | மூல பதிவேடு, மீதி உறுதிப்படுத்தல் கடிதம், காலப்பகுப்பாய்வு அறிக்கை மற்றும் துணை ஆவணங்கள். | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| சந்தைக் கடன் பட்டோரிடம் இருந்து கிடைக்க வேண்டிய மீதி | 3,589,879 | | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| செலுத்த வேண்டிய ஏனையவைகளுக்குரிய மீதி | 15,591,171 | | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| வங்கி பணத்திலிருந்து கொடுப்பனவு | 34,518,489 | உறுதிச் சீட்டு மற்றும் தொடர்புடைய ஆவணங்கள். | 2018 ஆம் ஆண்டின் ஆவணங்களை கூடிய விரைவில் உங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே 2018 ஆம் ஆண்டின் ஆவணங்கள் இடம் மாற்றலாகிச் செல்லும் போது தொலைந்து போயிருந்தமையை குறிப்பிட்டுக் கொள்கின்றோம். எவ்வாறாயினும் இந்த ஆவணங்களை கண்டறிந்து உங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், வங்கியிலிருந்து அந்த கொடுப்பனவுகளுக்குரிய காசோலைகளைப் பெற்றுக்கொள்வதற்கு எழுத்து மூலம் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. | உரிய கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்கான கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தொடர்புடைய தரப்பினரான இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து கிடைக்க வேண்டிய மீதியாக ரூபா 103,666,952 தொகை காண்பிக்கப்பட்ட போதிலும், இலங்கை துறைமுக அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் கம்பனிக்கு செலுத்த வேண்டியது ரூபா 98,938,252 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கம்பனிக்கு கிடைக்க வேண்டிய மீதியில் ரூபா 4,728,700 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இந்த வேறுபாட்டிற்காக இலங்கை துறைமுக அதிகார சபையுடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. மேற்கூறப்பட்ட மீதியில் உள்ளடக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டு முதல் இலங்கை துறைமுக அதிகார சபையில் இருந்து அறவிட வேண்டியிருந்த டக் கப்பலுக்கான இழப்பீட்டு பணம் ரூபா 25,719,981 தொகை, முகாமைத்துவ சேவைகள் கட்டணம் ரூபா 76,547,854 மற்றும் முகாமைத்துவ கம்பனியின் வளவில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் இருந்து இலங்கை துறைமுக அதிகார சபைக்குரிய வாகனங்களுக்காக விநியோகிக்கப்பட்ட டீசல் மற்றும் பெற்றோல் லீட்டர் 11,449 இற்கான ரூபா 1,399,115 தொகை என்பன உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், 2021 சனவரி 15 ஆம் திகதி வரையிலும் உரிய பணம் கம்பனிக்கு கிடைத்திருக்கவில்லை. மேலும், அவ்வாறு கிடைக்க வேண்டிய மீதிக்காக மீதி உறுதிப்படுத்தலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை உறுதிப்படுத்தி சமர்ப்பிக்காத பெறவேண்டிய மீதிகள் தொடர்பாக அவற்றை பெறுவதற்கு அல்லது பெறமுடியாதுள்ள இயலுமை தொடர்பாக கண்டறிந்து கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் இழப்பீட்டு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் செயற்படுதல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியால் 2014 ஆம் ஆண்டின் போது கப்பல் எண்ணெய் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டு தனியார் வங்கியொன்றில் இருந்து ரூபா 3,144,178,059 இற்கு சமமமான ஐக்கிய அமெரிக்க டொலர் 24,002,438 கடன் தொகையொன்று பெறப்பட்டிருந்ததுடன், நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 188,938,122 தொகையான வட்டித் தொகையையும் உள்ளடக்கியதாக செலுத்த வேண்டிய மொத்த வட்டிப் பணம் ரூபா 770,994,463 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டி மீதி ரூபா 4,190,556,780 இற்கு சமமமான ஐ.அ.டொலர் 23,071,433 ஆக இருந்தது. இந்த கடன் மீதி தொடர்பாக கம்பனியால் 2020 செப்டம்பர் 23 ஆம் திகதி மீதி உறுதிப்படுத்தல்கள் கோரப்பட்டிருந்த போதிலும், உரிய வங்கியினால் மீதி உறுதிப்படுத்தல் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மேற்கூறப்பட்ட கடன் மீதியின் சரியான தன்மை தொடர்பாக நிச்சியமற்ற நிலைமையொன்று காணப்பட்டது. மேலும், கம்பனியால் 2017 ஆம் ஆண்டின் போதும், அதன் பின்னனைய ஆண்டுகளின் போதும் கடன் அல்லது வட்டித் தொகை எதுவும் செலுத்தப்படாதிருந்ததுடன், இந்த கடன் பணத்தை மீள அறவிடுவதற்காக உரிய வங்கியினால் 2020 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு எதிராக வழக்கொன்று தொடரப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். கம்பனிக்கு எதிராக உரிய வங்கியினால் 2020 ஆம் ஆண்டின் போது கம்பனிக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்குத் தொடர்பாக எதிர்வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கௌரவ நீதிமன்றத்தில் இருந்து வழங்கப்படுகின்ற தீர்ப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் | நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் | புதிய தலைவர் மற்றும் முகாமைத்துவ | சுற்றறிக்கையின் பிரகாரம் தாமதமின்றி நிதி அறிக்கைகள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1. ஆம் பிரிவு. | | வரைவு வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனியின் 2019 ஆம் ஆண்டின் கணக்கு கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2021 சனவரி 06 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பணிப்பாளரை உள்ளடக்கிய புதிய பணிப்பாளர் சபையொன்று 2020 யூலை மாதத்தில் இருந்து நியமிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இடைக்கால சேவையில் ஈடுபட்டிருந்த நிதி முகாமையாளரின் சேவை 2019.12.31 ஆம் திகதியில் முடிவடைந்திருந்ததுடன், மீண்டும் நியமித்தல் 2020.08.13 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் 2019 ஆம் ஆண்டில் கணக்குகள் தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்று உரியவாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2015 யூன் 17 ஆம் திகதிய பீஈடீ 3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.2. ஆம் பிரிவு | (i) | அரசாங்கத்திற்கு சொந்தமான துணைக் கம்பனிகளின் தலைவருக்கு மாதாந்த படி செலுத்தும் போது வரிசை அமைச்சின் செயலாளரின் பரிந்துரை மற்றும் நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெறப்பட வேண்டியிருந்த போதிலும், மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட கம்பனியால் மேற்கூறப்பட்ட பிரகாரம் பரிந்துரை | தலைவரின் மாதாந்த படி மற்றும் கம்பனியின் பணிப்பாளர் சபையின் கூட்டத்திற்கான படிகள் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டுள்ளது. | முறையான அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக் கொள்ளப்படாமல் தலைவருக்கு மாதாந்தம் ரூபா 125,000 வீதம் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,500,000 தொகை படியாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனி எப் (F) வகையில் உள்ளடங்குகின்றமை யினால் கம்பனியின் கட்டுப்பாட்டு சபை கூட்ட படி செலுத்துவதற்காகவும் மேற்கூறப்பட்ட (i) இன் பிரகாரம் பரிந்துரை மற்றும் இணக்கப்பாடு பெறப்பட வேண்டும். மேலும் சுற்றறிக்கையின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்ட ஏ (A) முதல் ஈ (E) வரையான வகைப்படுத்தலின் பிரகாரம் ஆகக்கூடிய கூட்டப்படியாக ரூபா 12,500 தொகை ஏ (A) தரத்திற்குரியதாக இருந்த போதிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இல்லாத எப் (F) வகையின் பொதுமுயற்சியான கம்பனி 2019 ஆம் ஆண்டின் 09 மாதங்களில் நடாத்தப்பட்ட கூட்டங்களுக்காக பங்குபற்றிய ஒவ்வொரு பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்காக வும் வருகையின் போது ரூபா 25,000 | தலைவரின் மாதாந்த படி மற்றும் கம்பனியின் பணிப்பாளர் சபையின் கூட்டத்திற்கான படிகள் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டுள்ள து. | முறையான அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வீதம் ரூபா 1,225,000 தொகையும், 2018 ஆம் ஆண்டின் போது 06 கூட்டங்களை நடாத்தியதற்காக ரூபா 650,000 தொகையும் சுற்றறிக்கைக்கு முரணாக செலுத்தப்பட்டிருந்தது.

### 1.8 வரி பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் கிடைக்க வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி மீதி ரூபா 5,037,187 ஆக இருந்ததுடன், நிறுத்தி வைத்தல் வரிகளில் ரூபா 3,021,258 தொகைக்குரிய வரி சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் காரணமாக மேலே கூறப்பட்ட நிறுத்தி வைத்தல் வரி மீதியை வருமான வரி செலுத்தும் போது குறைத்து கொள்ளல் தொடர்பாக நிச்சியமற்ற நிலைமையொன்று காணப்பட்டது. | பழைய வருடங்களின் நிறுத்தி வைத்தல் வரி சான்றிதழ் வங்கியினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் கலந்துரையாடி இறுதி தீர்மானத்திற்கு வருதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 128,503,752 நட்டமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 801,559,524 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நட்டம் ரூபா 673,055,772 இனால் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மேலும் நட்டமொன்று காணப்படுகின்றமைக்கு இலங்கை அரசாங்கத்தின் மூலம் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் மாகம்புற துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனியின் செயல் நடவடிக்கைகள் 2017 நவம்பர் 13 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு வருமானம் காணப்படாமை மற்றும் கடன் அடிப்படையிலான வட்டி செலவினம் ஒன்றுசேர்ந்தமை என்பன பிரதான காரணமாக இருந்தது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

| | 2019 (ரூபா) | 2018 (ரூபா) |
|---|---|---|
| வருமானம் | - | - |
| நேர்ச் செலவினம் | - | **(6,805,801)** |
| நிர்வாக செலவினம் | **(7,191,239)** | **(41,722,417)** |
| செயற்பாட்டு இலாபம்/(நட்டம்) | **(7,191,239)** | **(48,528,218)** |
| தேறிய நிதிக் கிரயம் | **(148,185,664)** | **(194,055,646)** |
| அந்நிய செலாவணி நாணயமாற்று இலாபம்/(நட்டம்) | **26,873,152** | **(558,975,660)** |
| வரிக்கு முன் தேறிய இலாபம் | **(128,503,752)** | **(801,559,524)** |
| வருமான வரி | - | - |
| வரிக்குப் பின் தேறிய இலாபம் | **(128,503,752)** | **(801,559,524)** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. இந்த கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் 2017 நவம்பர் 13 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டமையின் காரணமாக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து கம்பனிக்கு வருமானம் கிடைத்திருக்கவில்லை.

ii. 2018 ஆம் ஆண்டில் ரூபா 558,975,660 தொகையான அந்நிய செலாவணி நாணயமாற்று நட்டம் மீளாய்வாண்டின் போது ரூபா 26,873,152 அந்நிய செலாவணி இலாபமாக ஏற்பட்டிருந்தது.

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

| | 2019 | 2018 |
|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் | 1:3.29 | 1:3.23 |
| விரைவு சொத்து விகிதம் | 1:3.32 | 1:3.27 |
| செயற்படு இலாப விகிதம் | - | - |

2018 ஆம் ஆண்டில் நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதம் முறையே 1:3.23 மற்றும் 1:3.27 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அது முறையே 1:3.29 மற்றும் 1:3.32 ஆக அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 3.1 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

-------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் போது கம்பனியின் ஊழியரினால் இழப்பீடு செலுத்தி நீக்கும் போது ஏற்பட்ட பிரச்சினையான நிலைமையினால் கொழும்பு தொழில் நீதிமன்றத்தில் தொழில்பிணக்குகள் தீர்த்தல் இலக்கம் A/37/2017 ஆம் தீர்மானம் மற்றும் 2018 பெப்ரவரி 02 ஆம் திகதிய தரப்பினர்களுக்கு இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒட்டு மொத்த நிபந்தனைகளுக்கு இணங்கியதன் அடிப்படையில் முடிவுறுத்தப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த நிபந்தனையின் நிபந்தனை இலக்கம் 18(ஆ) இன் பிரகாரம் 2017 நவம்பர் மாதத்திற்காக நிலுவை மேலதிக நேர படி மற்றும்/ அல்லது 2018 சனவரி வரை நிலுவை சம்பளம் செலுத்த வேண்டி இருக்குமாயின் அக்கொடுப்பனவுகள் 2018 பெப்பரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி பூர்த்தி செய்யப்பட வேண்டியமை இணங்கப்பட்டிருந்தது. | இணக்க சபை கலந்துரையாடலுக்கு முன்னாள் கம்பனியின் முகாமைத்துவம் பங்குபற்றியிருந்தது. இந்த இணக்க சபை நிபந்தனைகளில் 18 ‘‘அ’’ மற்றும் ‘‘ஆ’’ இன் கீழ் ஊழியர்களின் நிலுவையாகியிருந்த சம்பளம் செலுத்துதல் தொடர்பாக இணங்கப்பட்ட நிபந்தனைகள் காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த நிபந்தனைகளுக்கு இணங்கும் அடிப்படை பின்வருமாறு,<br><br>2017 நவம்பர் மாதத்தின் 29 ஆம் திகதி சகல ஊழியர்களும் வளாகத்தில் இருந்து அகற்றுமாறு அறிவிக்கப்பட்டிருந்து. அது வரையில் நவம்பர் மாதத்தில் வேலை ஆற்றிய காலத்திற்குரிய மேலதிக படிகள் மற்றும் சம்பளம் செலுத்துதல் இடம்பெறாதிருந்தமையால் விஷேடமாக நவம்பர் மேலதிகநேர படி செலுத்துமாறு இணங்கப்பட்டிந்தது. அவ்வாறே | இழப்பீட்டு பணம் செலுத்தும் போது உடன்பட்ட நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அந்த நிபந்தனைகளுக்கு முரணாக ஏதாவது கொடுப்பனவு மேற்கொள்ளப்படுமாயின் உரிய கொடுப்பனவுகளுக்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அவற்றை மீள அறவிட்டுக் கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனியினால் அங்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணாக கம்பனியின் செயற்பாடுகள் செயலற்று காணப்பட்ட 2017 திசெம்பர் மற்றும் 2018 சனவரி மாதங்களுக்குரிய பிரயாணச் செலவினம், தங்குமிட படிகள் மற்றும் செயலாற்றல் படிகள் மற்றும் வாகன படிகளாக ரூபா 12,211,073 தொகையான ஏனைய படிகள் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகளின் மூலமும் சுட்டிக்காட்டப்பட்ட போதும் உரிய விடயங்கள் தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொண்டு மேலதிகமாக செலுத்தியதற்காக பொறுப்பு வாய்ந்ததரப்பினரை இனங்கண்டு அறவிடுவதற்காக முகாமைத்துவம் மற்றும் பொறுப்புவாய்ந்த தரப்பினரால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அநேகமான ஊழியர்களில் 97 சதவீதம் அளவில் ஆரம்ப சம்பளம் ரூபா 12,000 – 20,000 இடையே காணப்பட்டது. அதனால் செயலாற்றல் படி ஒவ்வொரு ஊழியர்களுக்கும் நிரந்தர படியாக கம்பனியின் ஆரம்பம் முதல் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>மேலும் எரிபொருள், போக்குவரத்து, தங்குமிட படிகள் போன்றவை கம்பனியின் மத்திய மற்றும் உயர்தர முகாமைத்துவத்தின் 07 பேர்களுக்காக மாத்திரமே செலுத்தப்படுகின்றது. அந்த ஊழியர்களுக்கு கம்பனியின் மிகுதி வேலைகளைச் செய்வதற்காக தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. 360 ஊழியர்களுக்கு மேல் சேவையாற்றிய கம்பனியொன்று ஒரே தடவையில் வியாபார நடவடிக்கைகளை நிறுத்தினால் ஊழியர்களை விலக்குதல், இழப்பீட்டு பணம் கலந்துரையாடல், சொத்துக் கையளித்தல், ஆவணங்களை அகற்றுதல் போன்ற செயற்பாடுகளுக்காக நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஊழியர்கள் இருக்க வேண்டும். அந்த ஊழியர்கள் 2018.01.31 வரையும் தமது சேவையை முன்னரைப் போன்றே நிறுவனத்திற்கு வழங்குகின்றமையால் அவர்களின் சகல சமபளங்களும் செலுத்தப்படுதல் வேண்டும். | |
| (ஆ) | வலுவான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றில் கொடுப்பனவு உறுதிச் சீட்டு யாவும் தொடர் இலக்கத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். அவ்வாறே சகல | 2018 ஆம் ஆண்டின் ஆவணங்களை கூடிய விரைவில் உங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே 2018 ஆம் ஆண்டின் ஆவணங்கள் இடம் மாற்றம் செய்யும் போது காணாமல் போயிருந்தது. | கம்பனியின் கடிதங்கள் ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை கட்டிடத்தில் இருந்து அகற்றும் போது முறையாகவும் |

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களும் கணக்காய்விற்காக பூரணப்படுத்தப்பட்டு தயார் செய்யப்பட்டு வைப்பதற்கு உறுதிச் சீட்டுக்கு பொறுப்பான உத்தியோகத்தர் கண்காணித்து கொள்ள வேண்டியிருந்த போதிலும் மாகம்புற துறைமுக முகாமைத்துவ கம்பனியால் 2017 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 29,975,094 பெறுமதியுடைய 104 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் மற்றும் 2018 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 4,543,395 பெறுமதிடைய 19 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் என்பன 2021 மார்ச் 15 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எவ்வாறாயினும் அந்த ஆவணங்களை கண்டறிந்து உங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், வங்கியிடம் இருந்து அந்த கொடுப்பனவுகளுக்குரிய காசோலைகளை பிரதிகளை பெற்றுக்கொள்வதற்கு எழுத்து மூலம் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. | ஒழுங்கு முறையாகவும் மேற்கொள்ளாமையினால் இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியாகத்தர் தொடர்பாக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |